நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **2303/2017 தம3** நாள்: **26.03.2018**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - தஞ்சாவூர் மாவட்டம் - குமப்கோணம் வட்டம் - திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் - பெரப்படி ஊராட்சி மற்றும் கிராமம் - நி.அ.எண்கள்: **49/2Apt, 50/1pt,2pt-ல் 45913.00ச.அடி** பரப்பளவில் அமையும் குடியிருப்பு. மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017, 31.10.17, 07.11.17, 17.11.17 மற்றும் 20.12.17
4. மனுதாரர் திரு.M.பாலகுரு, அவர்களின் விண்ணப்பம் நாள்: 11.12.2017

---

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், குமப்கோணம் வட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், பெரப்படி ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: **49/2Apt,2B, 50/1pt,2pt-ல் 45913.00ச.அடி** பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 154/2018** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 45913.00ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 01

விற்கப்பட்ட மனை எண்கள்: 20

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 22

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1 – 16, 16A, 17 – 19, 21, 22

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 33866.50 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 3437.00 ச.அடி (10.13%)

30429.50
2826.96 sqm
Rs. 14835/-

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலணைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | மனை எண்: 1 – 19, 21, 22-ற்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலணைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்: (உதாரணமாக)

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 13 | 164.44 | 164.44 X 30 = ரூ.4934/- | 164.44 X 25 = ரூ.4111/- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularization Charges of UnapprovedLayouts and Plots –DTCP (DPC: 0217 60 800 AT 0007)** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விவரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. அரசாணை (நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு).,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.
20/3/2018

**இணைப்பு:**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு தொகுப்புகள்

**பெறுநர்:**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்

**நகல்:**

1) திரு.M.பாலகுரு,
நெ.75, மகாதான தெரு,
திருவிடைமருதூர்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

2) உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

(2, 3) — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு).

4) சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
நாச்சியார் கோவில்,
தஞ்சாவூர் மாவட்டம்.

(4) — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு).

5) தொழில்நுட்ப வைப்பறை
ஒரு வரைபட தொகுப்பு

**திருவிடைமருதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை. திருமதி.கோ.உமா**

ந.க.எண்.1919/2017/ஆ1 நாள்..04.02.2019

பொருள். மனை வரன்முறை - திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் - பெரப்படி ஊராட்சி நி.அ.எண்கள்-49/2Apt,2B, 50/1pt,2pt-ல் (56657.00) சதுர அடி பரப்பளவில்) அமைந்துள்ள குடியிருப்பு மனைக்கு தொழில்நுட்ப அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது

பார்வை.
1. மனுதாரர் திரு.எம்.பாலகுரு, அவர்களின் விண்ணப்ப நாள்.11.12.2017
2. நகர ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.2303/ 2017/த.ம.3 நாள்.26.03.2018.
4. ஊராட்சி மன்ற தீர்மான எண்.25 நாள்.04.02.2019

.....................................

ஆணை,

திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம் பெரப்படி ஊராட்சி நி.அ.எண்கள்-49/2Apt, 50/1pt,2pt-ல் (45913.0) சதுர அடி பரப்பளவில்) அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள மனைகளின் எண்ணிக்கை 22 -க்கு (1-16,16A,17-19,21,22) உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. வரன்முறை கட்டணம் 1ச.மீ-க்கு ரூ.30/- வீதம் ரூ.84810/-(ரூபாய் எண்பத்தி நான்காயிரத்தி எண்ணூற்று பத்து மட்டும்) திருவிடைமருதூர் பாரத மாநில வங்கியில் 21.05.2018 ல் செலுத்தப்பட்டுள்ளது.

2. வளர்ச்சி கட்டணம் 1ச.மீ-க்கு ரூ.25/- வீதம் ரூ.70675/- (ரூபாய் எழுபதாயிரத்தி அறுநூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) திருபுவனம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் மாவட்ட ஆட்சியரின் கணக்கிற்கு நாள்.22.05.2018ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டதால் பெரப்படி ஊராட்சி நி.அ.எண்கள்-49/2Apt,2B, 50/1pt,2pt-ல் (56657.00) சதுர அடி பரப்பளவில்) அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள 22-க்கு (1-16,16A,17-19,21,22) மனைகளில் மின் பாதை செல்லும் மனை எண்கள்.7,8,9,10,11 HT Line மாற்றியமைக்கப்பட்டு விட்டது என்வே தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை (3)ல் குறிப்பிட்டுள்ள ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் செயலாணையின் அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
பெரப்படி ஊராட்சி
திருவிடைமருதூர்.

இணைப்பு - வரைப்படம்.

பெறுதல்.
திரு.எம்.பாலகுரு,
எண்.75,மகாதான தெரு,
திருவிடைமருதூர்